அனுப்புநர்,

திருமதி.கி.சாந்தி,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
தருமபுரி.

பெறுநர்,

மாவட்ட வன அலுவலர்,
தருமபுரி.

ந.க.4904/2023/த2, நாள்: 25.10.2024.

பொருள் : நிலம் - ஈட்டு நிலம் - தருமபுரி மாவட்டம் - பாலக்கோடு வட்டம் - ஜக்கசமுத்திரம் கிராமம் - கும்மனூர் ஒதுக்கப்பட்ட காப்பு காடுகள் மற்றும் நல்லம்பள்ளி வட்டம் - தொப்பூர் ஒதுக்கப்பட்ட காப்பு காடு என வனத்துறைக்கு சொந்தமான நிலத்தில் கெயில் (இந்தியா) லிமிடெட் 5.58.31 ஹெக்டேர் தூரத்திற்கு இயற்கை எரிவாயு எடுத்து செல்ல குழாய் அமைத்தல் - வன நிலத்திற்கு ஈட்டு நிலமாக கம்மம்பட்டி கிராம புல எண்: 692/1-ல் அரசு நிலத்தில் வழங்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது - தொடர்பாக

பார்வை :
1.இவ்வலுவலக கடித எண்: ந.க4904/2023/த2 நாள்:28.08.2024.
2.தருமபுரி மாவட்ட வன அலுவலர் அவர்களின் அவர்களின் கடிதம் C.No.148/2023/D. நாள்:15.10.2024.
3.சென்னை,கெயில் (இந்தியா லிமிடெட்) துணை பொதுமேலாளர் கடித எண்: GAIL/KKBMPL-II/KCPL-I/60 -நாள்:18.10.2024.
4.மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி அறிவுரை நாள்:22.10.2024.
5.நல்லம்பள்ளி வட்டாட்சியரின் ந.க.1590/2024/இ1 நாள்: 22.10.2024.

-------

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், ஜக்கசமுத்திரம் கிராமம், கும்மனூர் ஒதுக்கப்பட்ட காப்பு காடுகள் மற்றும் நல்லம்பள்ளி வட்டம், தொப்பூர் ஒதுக்கப்பட்ட காப்பு காடு என வனத்துறைக்கு சொந்தமான நிலத்தில் கெயில் (இந்தியா) லிமிடெட் 5.58.31 ஹெக்டேர் தூரத்திற்கு இயற்கை எரிவாயு எடுத்து செல்ல குழாய் அமைக்கப்படவுள்ள வன நிலத்திற்கு ஈட்டு நிலமாக நல்லம்பள்ளி வட்டம் கம்மம்பட்டி கிராம புல எண்: 692/1-ல் கரடு அரசு புறம்போக்கு மொத்தம் விஸ்தீர்ணம் 22.12.56 ஹெக்டேர் நிலத்தில் வனத்துறைக்கு ஈட்டு நிலமாக 5.58.31 ஹெக்டேர் நிலம் வழங்குவது குறித்து பார்வை 1-ல் காணுமாறு சென்னை நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது.

இந்நேர்வில் பார்வை 2 மற்றும் 3-ல் காணும் கடிதங்களில் மேற்படி கெயில் நிறுவனத்திற்கு ஈட்டு நிலமாக ஒதுக்கீடு செய்து முன்மொழிவுகள் அனுப்பப்பட்ட கம்மம்பட்டி கிராம புல எண் 692/29-ல் பரப்பு 04.44.31 மற்றும் 692/30-ல் பரப்பு 1.14.0 ஹெக்டேர் நிலமானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஏற்கனவே ஈட்டு நிலமாக வடிகால் வாரியம் மூலம் அனுப்பப்பட்ட புல எண் 692/10-ன் மேல் பொருந்துகிறது எனவும், அதனை சரி செய்யுமாறும் கடிதம் வரப்பெற்றுள்ளது.

இதுதொடர்பாக, கெயில் நிறுவனம் மற்றும் IDPL நிறுவனத்திற்கு ஈட்டு நிலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏற்கனவே சென்னை நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்ட புலங்களில் மாறுதல்கள் ஏதும் செய்வதை தவிர்த்து ஒன்றின் மேல் ஒன்று பொருந்தாத(Over Lap) வண்ணம் அவற்றின் அருகிலேயே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு புல எண்.692/1-ல் புதிய உட்பிரிவு 692/26-ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே TWAD வாரியத்திற்கு அத்தியாவசிய அவசிய தேவையை கருத்தில் கொண்டு அதற்கு மேற்படி இடத்தினையும், கெயில் நிறுவனத்திற்கு ஏற்கனவே முன்மொழிவு அனுப்பப்பட்டவாறு கம்மம்பட்டி கிராம புல எண் 692/29-ல் பரப்பு 04.44.31 மற்றும் 692/30-ல் பரப்பு 1.14.0 ஹெக்டேர் நிலத்தையும், ஈட்டு நிலமாக வழங்க நடவடிக்கை தொடரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒம்/-கி.சாந்தி.,
மாவட்ட ஆட்சியர்,
தருமபுரி.

//உண்மை நகல்//

25/10/2024

மாவட்ட ஆட்சியருக்காக

நகல் :

1.வட்டாட்சியர்,நல்லம்பள்ளி.

2.The Deputy General Manager,
GAIL(India) Limited,
Central Construction Office,
C/O Hotel Ashwa Park,
96/6-A Steel Plant Main Road,
Reddipatty Roundana,Salem -600 002.